
172
32

# உளத் தூய்மை



இயற்றியோர்

**திரு. அடிகளாசிரியர்**

ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்
சித்தநாதேச்சுராதீனம்
குகையூர் அஞ்சல் - 606 306
விழுப்புரம் மாவட்டம்

பதிப்பாசிரியர்
சோதிடரத்னா

**முனைவர் அ. சிவபெருமான்**

4-சி, வெள்ளிவிழாச் சாலை
செயங்கொண்டசோழபுரம் - 621 802
பெரம்பலூர் மாவட்டம்

உ

இறைவன் துணை

# உளத் தூய்மை

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும்ஓர் குறைவிலை
கண்ணில் நல்ல..துறும் கழுமலை வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே
(திருஞானசம்பந்தர்)

ஆக்கியோன்:

குகையூர் பேராசிரியர்

**திரு அடிகளாசிரியர்**

**திருவருள் நிலைய வெளியீட்டகம்**

குகையூர் – அஞ்சல்

கல்லக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்-606 306

# நூலாசிரியர் உரை

உள்ளத்தின் நலத்தை வலியுறுத்துகின்ற ''உளத் தூய்மை'' என்னும் இச்சிறு நூலை 1984 ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் முதல் பதிப்பாக வெளியிட்டேன். பின்னர் பேராசிரியர் பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பனார் அவர்கள் என் அனுமதியுடன் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார். தாரமங்கலத்தில் வாழ்ந்து வரும் சந்த வள்ளியார் குடும்பத்தைச் சேர்ந்த உயர்திரு சு. பூபதிராஜன் குடும்பத் திருமண விழா நாளில் மூன்றாம் பதிப்பை வெளியிடு கின்றேன்.

இந்நூல் நாட்டு மக்களுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து நல்லதைச் செய்ய வேண்டு மென்று இறைவனை வேண்டிக் கொள் கின்றேன்,

இங்ஙன்

**திரு. அடிகளாசிரியன்**
ஒய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியன்
சித்தநாதேச்சுராதீனம்
குகையூர் - அஞ்சல்
விழுப்புரம் மாவட்டம்
606 306

15—12—2004

### அபிராமி பட்டர் அருளிய

# அபிராமி பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராதநட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாழி! அபிராமியே!

உ

இறைவன் துணை

## உளத் தூய்மை

இவ்விலக்கியம் நுண்ணுடம்பு என்னும்
சூக்கும உடம்பின் தூய்மையைக் கூறுகிறது
இவ்வுடம்பிற்குப் 'புரியட்டகாயம்' 'கள்ளப்
புலக்குரம்பை' என்பனவும் பெயராகும்

## இலக்கியத் தொடக்கம்

1. 'நீல மலையின் ஓரத்தே
நெளிந்து செல்லும் சிற்றாற்றின்
கோல மணலின் குவியலிலே
குடும்பச் சூழல் புறச்சூழல்
சாலத் தாக்கச் சஞ்சலமாய்ச்
சற்றும் அமைதி யில்லாமல்
மால மலங்கும் உளத்தோடு
மகிழ்ச்சி யின்றி நின்றிருந்தேன்.

'நீலநிறமான மலைப்பக்கத்தே வளைந்து வளைந்து செல்லும் சிற்றாற்றின் மணல்திட்டிலே, குடும்பச் சூழலாலும் புறச்சூழலாலும் ஏற்பட்ட சஞ்சலங்கள் மிகவும் தாக்க, அதனால் வருந்தி, அமைதியில்லாத உள்ளத்தோடு நின்றிருந்தேன்.

2. மண்ணைப் பொன்னாய் மாற்றிவிடும்
மஞ்சள் வெய்யிற் பொன்மாலை
வண்ண முல்லை வாய்திறந்து
வண்டை அழைக்க வந்ததுவே;

கண்ணைக் கவரும் காவகத்தே
காதுக் கினிய குயிலோசை
எண்ணந் தன்னை பிடித்திழுக்க
இந்த உலகை மறந்திருந்தேன்.

"அப்பொழுது மண்ணுலகத்தைப் பொன்னுலகம்போல் மாற்றி விடும் மஞ்சள் நிறமான வெயிலை வீசும் மாலைக் காலமானது, முல்லை அரும்பு இதழ் திறந்து வண்டினை அழைக்குமாறு வந்தது. கண்ணைக் கவருகின்ற சோலையின் நடுவிடத்திலிருந்து எழும் குயிலோசை என் எண்ணத்தைப் பிடித்திழுக்க, இவற்றால் நான் இந்த உலகத்தையே மறந்திருந்தேன்.

## வெள்ளைத் துறவியின் வருகையும் வினாவும்

3. வெள்ளை உடையை அணிந்திருந்த
வெள்ளை மனத்துத் திருத்துறவி
மெள்ள வந்தே என்னருகு
மெல்ல நகைத்துப் பார்த்தாரே;
துள்ளிக் குதித்து வணங்கினேன்;
தூயோன் என்றன் முகம்நோக்கி,
உள்ளம் நலமா? உள்ளத்தின்
உணர்வு நலமா? என்றானே.

அப்பொழுது வெள்ளையான தூய உடையை உடுத்தி யிருந்த தூய மனத்தினை உடைய நல்ல துறவி ஒருவர் மெல்ல என்னருகே வந்து புன்னகை புரிந்து என்னை உற்று நோக்கினார். நான் உவகையால் துள்ளிக் குதித்து வணக்கஞ் செய்தேன். அத்தூயவன் என் முகத்தைப் பார்த்து, உன் உள்ளம் நலமா? உன் உள்ளத்தின் உணர்வு நலமா? என்று வினாவினான்.

## என் மறுமொழி

4. சிக்க லான கேள்வியிது,
சிறியேன் விடையை அறியேனே;
எக்கா லத்தும் என்போன்றோர்
இந்த வினாவைக் கேட்டறியார்;
மிக்கோ ரெல்லாம் உடல்நலமா?
மேவுங் குடும்பம் தொழில்நலமா?
தக்காய் கூறென் றுறுரைப்பாரே;
தரையிற் புதுமை உன்கேள்வி.

இதனைக் கேட்ட யான், இது சிக்கலான வினாவாகும்; சிறியேன் விடை கூற அறியேன். என் போன்றோர் எப்பொழுதும் இது போன்ற வினாவினைக் கேட்டறியாரே! பெரும்பாலான மக்கள் ஒருவரை ஒருவர் கண்டால் உன் உடம்பு நலமா? குடும்பம் நலமா? செய்யும் தொழில் நலமா? என்று தான் கேட்பார்; உன் வினா உலகத்திலேயே புதுமையாயிருக்கிறதே!

## துறவியின் அறிவு தரும் மொழி

5. என்றே சொன்னேன்; அத்துறவி
எண்ணித் தெளிவாய் இயம்புகிறான்;
நன்றே அன்ப! உனது மொழி
நாடித்தெளிவாய் உரைப்பேம்கேள்;
ஒன்றே அன்றே உன்னுடலம்,
உள்ளும் புறம்பும் எனவிரண்டாம்;
அன்றி, அவைதாம் சூக்கமென்றும்
ஆகுந்தூலம் என்றும்பேர்.

என்று மறுமொழி உரைத்தேன்; இதைக்கேட்ட அத்துறவி என் மறுமொழியை எண்ணிப்பார்த்து எனக்குப் புரியும்படித்

தெளிவாக விடைகூறத்தொடங்கினார். அன்பனே! நீ கூறியமொழி நன்று; இதனை ஆராய்ந்து உனக்குத் தெளிவாகக்கூறுவோம் கேட்பாயாக; உன் உடம்பு ஒன்றன்று; "மாயப்பை ஒன்றுண்டு மற்றுமோர் பையுண்டு" என்று திருமூலர் கூறியவாறு, உள்ளுடம்பென்றும் புறவுடம்பென்றும் இரண்டாகும். அன்றி, உள்ளுடம்பைச் சூக்குமம் என்றும், புறவுடம்பைத் தூலம் என்றும் கூறுவர்.

6. தூல உடம்பு மின்போலத்
தோன்றி நின்று மறைந்திடுமே!
மூல உடம்பாஞ் சூக்குமமோ
முடிவதில்லை ஊழிவரை;
ஏலுங் கள்ளப் புலக்குரம்பை
எண்ணும் புரியட் டம்என்றல்
சாலும் பெயராம்; இதனியல்பைச்
சாற்று கின்றேம் கேட்பாயே.

புற உடம்பாகிய தூல உடம்பு மின்னலைப்போலத் தோன்றிச் சிலகாலமிருந்து அழிந்து விடும். தூலத்திற்கு மூலமாகிய சூக்கும உடம்போ அவ்வாறு சிலகாலத்துள் அழிவதில்லை. அது படைப்புக் காலம் தொடங்கி தோன்றிப் பிரளயகாலம்வரை அழியாதிருக்கும். இதற்குக் கள்ளப்புலக்குரம்பை, புரியட்ட காயம்என்பன பெயராகும்.

குறிப்பு: "ஒத்தாய பிரளயத்தில் ஒடுங்கும் சூக்கம்" என்பது உபநிடதம்

7. புலனோ ரைந்தும், புத்திமன
ஆங்கா ரங்கள் மூன்றுடனே
நில்வ எட்டாம்; இதனாலே
நேர்ந்த புரியட் டகம்என்பர்;

வலனார் எட்டுள், ஓரைந்தும்
வழுவில் புறமாம்; பின் மூன்றும்
குலவும் அகமாம்; அகத்தினையே
குறிப்பர் உள்ளப் பெயராலே.

"சத்த பரிச ரூப ரசகந்த, புத்தி மனாங்காரம் புரியட்ட காயமே" என்ற திருமந்திரப்படி, புலன் ஐந்தும் புத்தி மனம் அகங்காரம் என்னும் மூன்றும் சேர எட்டாகும். இவ்வெட்டினையே புரியட்ட காயம் என்பர். அவ்வெட்டுள் புலன் ஐந்தும் புறமாகும்; புத்தியும் மனமும் அகங்காரமும் அகமாகும்; இவ் அகம் மூன்றினையே அறிஞர் உள்ளம் என்று வழங்குவர்

8. புரியட் டகந்தான் உயிரோடு
பொருந்தி நிற்கும் நுண்ணுடம்பாம்;
இரியுந் தூல உடலழியின்,
எண்ணும் உயிரோடு இதுஇருந்து,
விரியும் நரகம் மண்விண்ணில்
வேகக் குதிரை போலோடி
சுரியும் வினையால் சென்றிருந்து
தோன்றும் உடம்புக் கொருமுதலாம்.

இப்புரியட்ட காயந்தான் உயிருடன் நெருங்கிய சம்பந்தமுடைய நுண்ணுடம்பாகும். இது தூல உடம்பு அழிந்தால் அதனுடன் அழியாது உயிருடனிருந்து, "காயும் புரவி கால்வைத்து வாங்கல் போல், சேய இடம்அண்மை செல்லவும் வல்லது" என்று திருமந்திரம் கூறுவது போலக், கீழுலகம் நடுவுலகம் மேலுலகங்களில் விரைந்து செல்லும் குதிரை போல உயிரைச் சுமந்தேகி, வினையினால் அதற்குத்தக்க இடங்களில் தங்கி, இனி வரும் தூல உடம்பிற்கு முதலாகி நிற்கும்.

9· உளமாம் புத்தி மனாங்காரத்(து)
உதிக்கும் உணர்வு மூன்றாகும்;
வளமாம் புத்தி ஆய்ந்தறியும்;
வாகாய் அதனில் மனம் ஓடும்;
களமாம் அகங்கா ரந்தானும்
கருதும் அதனில் முனைத்தெழும்பும்;
கொளவே ஆய்தல், ஓடிடுதல்,
கொண்டே எழுதல் உளஉணர்வாம்.

உள்ளம் என்ற சொல்லாற் குறிக்கப்படும் புத்தி மன அகங்காரங்களில் தோன்றும் உணர்வுச் செயல்களும் மூன்றாகும். ஐம்புலன் கண்டு தந்தவற்றைப் புத்தி ஆராய்ந் தறியும், மனம் அவற்றில் ஓடும்; அகங்காரம் அவற்றைப் பற்றி எழும்; அதனால் ஆய்தல், ஓடுதல், பற்றி எழுதல் என்னும் மூன்றினை அறிஞர் உள்ளவுணர்வென்பர்.

10. புலன்கள் கண்டு தந்தவற்றைப்
பொருந்தி ஆய்ந்தே, அவற்றோடி,
இலங்கப் பொருந்தி எழுவதுவே
எண்ணும் உணர்வு என்பாரே;
மலங்கப் புலன்கள் மாறுபட்டு
மன்னும் உணர்வை மாற்றிவிட,
விலங்கி ஓடும் உள்ளந்தான்
விளங்கும் உலகப் பொருள்களிலே.

புறமாகிய ஐம்புலன்களும் கண்டு தந்த உலகப் பொருள்களைப் பொருந்திநின்று ஆய்தலையும், அவற்றிலே ஓடுதலையும் அவற்றைப் பற்றி எழுதலையும் உள்ள உணர்வு என்பர். ஐம்புலங்களும் ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் மாறுபட்டு உள்ள உணர்வை மாற்றிவிட்டால், உள்ளம் மாறுபட்டு, பலவகை உலகப் பொருள்களில் நாட்டங் கொள்ளும்.

11. நல்ல பொருளைத் தீப்பொருளை
நாடிப் புலன்கள் கண்டுதர,
புல்லி நின்ற உள்ளந்தான்
புகலும் அவற்றால் திரிபடையும்;
வல்லோர் நல்ல பொருள்காண்பார்
வருத்தும் தீமைதமைப் பாரார்;
அல்லோர் நல்ல பொருள்நாடார்
அல்லற் படுத்தும் பொருள்காண்பார்.

உலகத்திலுள்ள நல்ல பொருள்களையும் தீயபொருள்களையும் புலன்கள் நாடிக் கண்டு தர, அப்புலன்களுடன் பொருந்திநின்ற உள்ளம் புலன்கள் தந்த பொருள்களால் வேறுபாட்டையும். அக்காரணத்தால் அறிவில் வல்லவர் நல்ல பொருள்களையே காண்பார்; வருத்தத்தை உண்டாக்கும் தீய பொருள்களைக் காணார்; அறிவில்லாதவரோ நல்லபொருள்களையே நாடார்; துன்பத்தை உண்டாக்கும் தீய பொருள்களையே நாடுவர்.

12. தூல உடம்பு தூய்மைபெறின்
தோன்றும் நன்மை சிலவாகும்;
மூல உடம்பு தூய்மை பெற்றால்
முற்றும் நன்மை மிகப்பலவாம்;
ஏல, நன்கு, தெளிவாக
இவற்றை உணர்க; இதனாலே
கோலும் உளத்தை - அதன் உணர்வைக் -
குறித்து நலமா? என்றோமே.

புற உடம்பாகிய தூல உடம்பு அழுக்கில்லாமலிருப்பின் அதனால் விளையும் நன்மை சிறியதாக இருக்கும்: தூல உடம்பிற்கு மூலமாகிய சூக்கும உடம்பு தூய்மையைப் பெற்றலோ கிடைக்கும் நன்மை மிகப்பெரிதாக இருக்கும்.

இதனை உள்ளம் கொள்ளும்படி நன்றாகத் தெளிவாக உணர்க. இக்காரணத்தினாலே தான் உன்னைப் பார்த்து, உன் உள்ளம் நலமா? உள்ளத்தின் உணர்வு நலமா என்று வினாவினோம்.

13. உள்ளந் தம்மில் அழுக்காற்றை
ஓயாச் சினத்தைக் காமத்தைக்
கொள்ள வளர்த்தால் ஐயையோ
கூறும் உள்ளம் மிகக் கெடுமே;

இன்னும்,

எள்ளும் இவறல் பொய்வஞ்சம்
இழிந்த களவு கொலைபுலையால்
ஒள்ளி தான உளங்கெடுமே
கெட்டால் சூக்கம் அழுக்கேறும்.

உள்ளத்தில் ஓயாமல் பொறாமையினையும் சினத்தினையும் காமத்தினையும் கொள்ளுமாறு வைத்து வளர்த்தால், அதனால் அதனால் உள்ளம் மிகவும் கெட்டுவிடுமே; மேலும் உலோபம், பொய், வஞ்சகம், களவு, கொலை, புலாலுண்ணுதல் என்னும் தீயசெயல்களால் நல்ல உள்ளமும் கெடும். உள்ளம் கெட்டால் சூக்கும உடம்பு அழுக்கேறும்.

14. சூக்க உடலம் அழுக்கேறின்
சொல்லுந் தீமைக் களவில்லை;
ஆக்க மாகும் நற்பிறவி
அந்த உயிர்க்குக் கிட்டாதே;
தாக்குந் தீய உடம்போடு
தரணி தன்னிற் பிறந்திறக்கும்;
நோக்கம் நன்றாய் அமையாது,
நுவலும் கைகால் முடம்உறுமே.

சூக்கும உடம்பு அழுக்கேறினால் அதனால் விளையும் தீமைக்கு அளவேயில்லை; அச்சூக்கும உடம்புடன் கூடிய உயிர்க்கு நல்லபிறவி கிடைக்காது; பிறருக்கு தீங்கு புரியும் உடம்பினையே பெற்றுப் பிறந்து இறந்து உழலும்; அதற்கு விழி நன்றாய் அமையாது; கைகால்கள் மூடம் அடையும்.

15. அன்பு வாய்மை ஆர்வம் அருள்
அறத்தின் மேலே பெருவிருப்பம்
இன்ப மாக்கும் நல்லமைதி
எண்ணுங் கடவுள் வழிபாடு
நன்பு நிறைந்த இன்சொல்கள்
நாடிப் பிறர்க்கு நலம்புரிதல்
முன்பு நிறைந்த இவற்றாலே,
முதிர்ந்த சூக்கம் தூய்மை பெறும்.

அன்பு, உண்மை, ஆர்வம், அருள், அறச்செயல்களில் மிக்க விருப்பம், அமைதி, கடவுள் வழிபாடு, இன்சொற் சொல்லுதல், பிறர்க்கு நலம்புரிதல் முதலான இவற்றைப் பெற்றால், ஒருவருடைய உடம்பு தூய்மையை அடையும்.

16. சூக்க உடம்பு தூய்மை பெறின்
சொல்லும் நன்மைக் களவில்லை;
ஆக்க மான தூலவுடல்
அமையும்; நல்ல வாழ்வுவரும்;
ஏக்க மில்லை; சொற்செயல்கள்
இனிதாய்ப் பயனாய் நடைபெறுமே;
மோக்க மடைவர் அரன்றானும்
மூல உடம்பின் கட்டவிழ்க்க.

சூக்கும உடம்பு தூய்மை பெற்றால் அதனால் உண்டாகும் நன்மைக்கு அளவே இல்லை. அச்சூக்கும உடமபின் கூடிய உயிர்க்கு நல்ல உடம்பே கிடைக்கும்

அதனால் நல்வாழ்வு வரும். கவலை உண்டாகாது. சொல்லும் செயலும் நல்ல வழியில் நடக்க நற்பயன் உண்டாகும். இறுதிக்காலத்தில் இறைவன் சூக்கும உடம்பின் பிணிப்பை அவிழ்த்துவிட, அவ்வுயிர் மோட்சம் அடையும்.

17. வெள்ளைக் குணமாம் சத்துவத்தை
விரும்பிப் பயிலும் மக்களுக்கே
உள்ள உணர்வு தூய்மைபெறும்!
உரைக்குஞ் சூக்கம் நன்றாகும்;
கள்ளப் புலத்தின் வழியடைக்கும்;
கருத்தில் தெய்வ ஒளியுண்டாம்
மெள்ள மெள்ள மேலேறி
மேவி நிற்பார் அருள்வாழ்வில்.

வெள்ளைக்குணம் என்று சிறப்பித்துக் கூறப்படும் சாத்துவிக குணத்தை விரும்பி அதன்கண் பயிலும் மக்களுக்கு உள்ளமும் உணர்வும் தூய்மை அடையும்; அவை தூய்மை பெறவே, சூக்கும உடம்பு அழுக்கேறாமல் நன்றா யிருக்கும்; ஐம்புலன்களின் தீய வழி அடைக்கப்படும்; உள்ளத்திலும் உணர்விலும் தெய்வ ஒளி உண்டாகும். படிப்படியாக முன்னேறி அருளையே ஆண்டு, உலகத்திற்கு நலமே புரியும் துறவு வாழ்வை அடைந்து நிலை பெறுவர்.

18. வாய்மை ஒன்றாற் பண்படுத்தி,
வளர அன்பை நன்கூன்றித்,
தூய்மை இல்லா அழுக்காறு
துன்பாஞ் சினங்கா மங்களைந்த
ஆய்மை உளமே அறஞ்சாலும்
அழகார் தூய உளமாகும்;
தாய்மை நிறைந்த இவ்வுளத்தோர்
தகுதி எம்மால் இயம்பரிதே.

அகந்தூய்மை வாய்மையாற் செய்து கொள்ளப்படுவா தாதலின், உள்ளத்தை வாய்மையாற் பண்படுத்தி, அதில் அன்பென்னும் விதையை நன்றாக ஊன்றி, அப்பயிர் முளைத்தெழுந்தவுடன் அதற்கு இடையூறு நிகழாமல் பொறாமை, சினம், காமம் என்னும் களைகளைக் களைந் தெறிந்துவிட்டு, நிலையான பொருளை ஆராய்ந்து உணரும் உள்ளமே அறம் அமைந்த அழகிய தூய உள்ள மாகும். அவ்வுள்ளத்தை உடையோர் தகுதி எம்மால் இயம்பரிது.

19. தன்னைப் பற்றிக் கருதாமல்
தடித்த உளத்தைப் பெற்றிருந்தே,
பொன்னைப் புவியைப் போகத்தைப்
பொருத்தி அவாவிப், பிறர்நலத்தை
உன்னிப் பார்க்கும் உணர்வின்றி
ஓயாத் தீமை பலவியற்றிக்
கொன்னே சாகும் நலமில்லாக்
குருடர்க் கிதுதான் புரியாதே.

தன் நிலைபற்றிச் சிந்தனை செய்யாமல். செருக்கேறிய உள்ளத்தைப் பெற்றிருந்து, பொன்னையும் பூமியையும் போகப் பொருள்களையுமே விரும்பிப், பிறர் நலத்தை நினைத்துப் பார்க்கும் அறிவின்றி, ஓயாமல் தீயகாரியங் களையே செய்திருந்து, பயனான காரியங்களில் எதுவும் செய்யாமற் சாகும் குருடர்க்கு, மேலே கூறியவையெல்லாம் விளங்காதென்று அத்துறவி கூறிமுடித்தான்.

## என் புகழ் மொழி

20. என்றன் உளத்தின் அவலத்தை
என்முன் தோன்றி மாற்றியிட்ட
நன்றே புரியும் நல்லோனை
நன்கு வணங்கிப் புகழ்ந்தோதி,
குன்றே அனையாய்! "அறிவர்மொழி
குருடர்க் குதவும் விழியையென"
அன்றே உரைத்த உரையியல்பை
அடியேன் அறிந்தேன் இன்றென்றேன்.

துறவியார் கூறிய அறிவு மொழியைக் கேட்ட யான் அவரை நன்கு வணங்கிப் புகழ்ந்து கூறி, நற்குணக் குன்றே! "அறிவரின் சொற்கள் குருடர்க்குக் கண்களைத் தரும்" என்று அன்று சொன்ன சொல்லியல்பை அடியேன் இன்று அறிந்து கொண்டேன்; யான் விழி பெற்றேன் என்று வணங்கினேன்.

முற்றும்.

உ

இறைவன் துணை

# உளத் தூய்மை

ஆசிரியர் :

**திரு. அடிகளாசிரியர்**

பதிப்பாசிரியர் :

**அ. சிவபெருமான்**

நூலின் சில துளிகள்...

- ☐ மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்
- ☐ அன்பு, உண்மை, ஆர்வம், அருள், அறச்செயல்களில் மிக்க விருப்பம், அமைதி, கடவுள் வழிபாடு, இன்சொற் சொல்லுதல், பிறர்க்கு நலம்புரிதல் முதலான இவற்றைப் பெற்றால், ஒருவருடைய சூக்கும உடம்பு தூய்மையை அடையும்.
- ☐ சூக்கும உடம்பு தூய்மை பெற்றால் அதனால் உண்டாகும் நன்மைக்கு அளவே இல்லை. அச்சூக்கும உடம்பின் கூடிய உயிர்க்கு நல்ல உடம்பே கிடைக்கும். அதனால் நல்வாழ்வு வரும். கவலை உண்டாகாது. சொல்லும் செயலும் நல்ல வழியில் நடக்க நற்பயன் உண்டாகும்

சுபம் பிரிண்டர்ஸ், சிதம்பரம் - பேசி: 232544